**அரச கருமமொழிகள் ஆணைக்குழுவி 2013**

---

அரச கருமமொழிகள் ஆணைக்குழுவின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1991 இன் 18 ஆம் இலக்க அரச கருமமொழிகள் ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் 17(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

----------------------

### 2.1 அபிப்பிராயம்

----------------------

நிதிக்கூற்றுக்கள் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரச கருமமொழிகள் ஆணைக்குழுவின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

வங்கிக் கட்டணம் ரூபா 43,443 தொகை மற்றும் ஏனைய செலவினம் ரூபா 6,000 தொகை என்பன கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 757(ஆ) | மீளாய்வாண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2006 சனவரி 25 ஆந் திகதிய அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவை | |
| (i) 5.4.10 ஆம் பிரிவு | ரூபா 1,852,437 கூட்டுப் பெறுமதியான 6 வழங்கல் தொடர்பான கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 5.4.4(1) ஆம் பிரிவு | ஏற்றுக்கொள்ளக்கூடிய முற்பணக் கொடுப்பனவுகள் காப்பீட்டின் அடிப்படையில் ஆகக்கூடியது 20 சதவீதம் முற்பணமாக செலுத்த முடியுமாக இருந்த போதிலும், ரூபா 644,375 தொகையான மொத்த ஒப்பந்தப் பெறுமதியில் 50 சதவீதம் அதாவது ரூபா 322,000 தொகை முற்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) 2011 செப்தெம்பர் 15 ஆந் திகதிய 58(2) ஆம் இலக்க | தலைவரினதும் பணிப்பாளர் சபையினதும் அங்கத்தவர்களின் பங்குபற்றல் படிகளில் 10 |

பொது முயற்சிகள் சதவீத நிறுத்திவைத்தல் வரி கழிக்கப்பட்டு சுற்றுநிருபத்தின் 3.1 ஆம் அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை.
பந்தி

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் பின்னர் பற்றாக்குறை ரூபா 3,131,575 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 4,707,830 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 1,576,255 இனால் குறைவடைந்தமைக்கு மீண்டெழும் மானியம் ரூபா 5,550,000 இனால் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் இலத்திரனியல் ஊடகங்களைப் பயன்படுத்தி மொழி உரிமைகள் தொடர்பாக பொது மக்களுக்கு அறிவூட்டுவதற்காக ரூபா 3,200,000 தொகை செலவில் 24 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு திட்மிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 114,000 செலவில் ஒரு நிகழ்ச்சித்திட்டம் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

**4.2 செயற்பாடற்ற குறைவான பயன்பாடுடைய சொத்துக்கள்**

ஆணைக்குழுவிற்குரிய ஒரு வாகனம் வருடத்திற்கு மேற்பட்ட காலம் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்ட போதிலும் அவ்வாகனத்தை பழுதுபார்த்து ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்கோ அல்லது வேறு செயற்பாடுகளை எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டிற்காக உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலமும் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான பலவீனங்கள் அவ்வப்போது ஆணைக்குழுவின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கொள்வனவுகள்

(ஆ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு